# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

<u>ஆணை நாள்</u> <u>10.11.2020</u>

<u>**முன்னிலை**</u>

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

<u>**வழக்கு எண். SA 8752/B/19**</u>

திரு ச. நாகராஜன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
உதவி திட்ட இயக்குநர்,
உதவி திட்ட இயக்குநர் அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

<u>**ஆணை**</u>

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு ச. நாகராஜன் மற்றும் பொது தகவல் அலுவலர், திரு ஜெகதீசன், உதவி திட்ட இயக்குநர், உதவி திட்ட இயக்குநர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 11.05.2019 தேதியிட்ட மனுவில், விருதுநகர் மாவட்டம், ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் (முகமை) தலைமையில் செயல்பட்டு வரும் 11 ஊராட்சி ஒன்றியங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டங்களின் விவரங்கள் தொடர்பாக விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர், 28.06.2019 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முழுமையான தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 05.09.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக மனுதாரர் அவர்கள் தான் கோரியுள்ள தகவல்கள் தனக்கு கிடைக்கப்பெற்றது என்று தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும், பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 8752/B/19</u>**

**<u>பெறுநர்</u>**

பொது தகவல் அலுவலர்,
உதவி திட்ட இயக்குநர்,
உதவி திட்ட இயக்குநர் அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம்.

திரு ச. நாகராஜன்,
11/197ஏ1, முத்துமாரி நகர்,
4வது தெரு,
சொக்கலிங்காவுரம் கிராமம்,
சமுசிகாபுரம் பஞ்சாயத்து,
கே.ஆர்.நகர் அஞ்சல்,
இராஜபாளையம் வட்டம்,
விருதுநகர் மாவட்டம் 626 108.

Copy to: File
SCPA-12.11.20